அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி
அலுவலகர்கள் மற்றும்
இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி

ந.க.எண். 125746/பி1/2019 நாள் : 17.03.2020

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மார்ச் / ஏப்ரல் 2020 – பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – பள்ளி மாணாக்கரின் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு –Part-I மற்றும் விருப்ப மொழிப்பாடம் Part – IV – தலைமையாசிரியர்கள் உறுதி செய்து கொள்ளுதல் – தொடர்பாக.

பார்வை : அரசுத் தேர்வுகள் இயக்கக இதே எண்ணிட்ட கடித நாள். 10.02.2020, 14.02.2020 மற்றும் 18.02.2020.

******

பார்வையில் காணும் கடிதங்களில் நடைபெறவுள்ள மார்ச் / ஏப்ரல் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கான பள்ளி மாணாக்கர்களின் பெயர்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிக்கான User ID மற்றும் Password பயன்படுத்தி பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டது.

தற்போது பள்ளி மாணாக்கர்களுக்கான தேர்வுக் கூட நுழைவுச்சீட்டில் Part-I–ல் பதியப்பட்ட பாடங்களில் திருத்தங்கள் இருப்பதாகவும் மற்றும் விருப்ப மொழிப்பாடம் Part – IV –ல் பதிவேற்றம் செய்யாமல் இருப்பதாக தெரிவித்து ஒருசில பள்ளிகளில் இருந்து நேரடியாக கோரிக்கைகள் பெறப்படுகின்றன.

எனவே, Part-I மொழிப்பாடம் மற்றும் விருப்ப மொழிப்பாடம் Part – IV போன்றவற்றில் தேர்வு கூட நுழைவுச்சீட்டில் சரியாக பதியப்பட்டுள்ளதா என்பதனை தலையைாசிரியர்கள் தனி கவனம் செலுத்தி உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்காண் பொருள் குறித்து தகவலினை அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் சுற்றறிக்கையின் வாயிலாக தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. தேர்வுகள் தொடங்க குறுகிய நாட்களே உள்ளதால் மாவட்டக் கல்வி அலுவலகர்கள் மேற்காண் பொருள் குறித்து தனி கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

நகல்

1. அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் (மாவட்டக் கல்வி அலுவலர் வழியாக)
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்